DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 87/2021 |
| Deposition of witness | : | P W– 4 |
| Name | : | பூமி குமார் |
| Father's /Husband Name | : | இராமையன் |
| Village | : | திருத்துறைப்பூண்டி |
| Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Age | : | 59 |
| Occupation | : | வட்டாட்சியரின் வாகன ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04th day August, 2025.
Accused present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:–**

நான் எந்த ஆண்டு பணியில் சேர்ந்தேன் என்றால் 2006 ம் ஆண்டு சேர்ந்தேன். நன்னிலம் வட்டாட்சியர் திரு. மணிமன்னனிடம் எத்தனை வருடங்களாக பணி செய்தேன் என்றால் ஒன்னேமுக்கால் ஆண்டுகள் பணி செய்தேன். நான் அவரிடம் பணியில் இருந்த காலத்தில் அவர் மணல் திருட்டு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பணியில் இருந்தபோது அவர் ஏதேனும் வாகன தனிக்கை செய்துள்ளாரா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று பணியில் இருந்ததற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் வழங்கினேனா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் விசாரித்தார்கள் ஆனால் வாக்குமூலம் வாங்கினார்களா என்று நினைவில்லை. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 2 புள்ளி விவர கணக்கிற்காகவும் அவரது உயரதிகாரியிடம் கணக்கு காண்பிக்க வேண்டியும் அளித்துள்ள பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு கண்காணிப்பில் ஈடுபட்டோம் என்று குறிப்பாக கூறியுள்ளோமா என்றால் கூறியுள்ளோம். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா. 2 ஐ அசிங்கமாக திட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.20 17:53:25 +0530